# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 25-02-2020 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி 94 வருடமாக நடைபெற்று வருகிறது. மேற்படி பொருட்காட்சி நடத்துவதற்கு அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதன்படி கடந்த வருடம் 94-வது வாவுபலி பொருட்காட்சி ஒரே இனமாக நடைபெற்றது போல் இந்த வருடமும் 95-வது வாவுபலி பொருட்காட்சியினை ஒரே இனமாக குத்தகைக்கு விடவும் மேற்படி பொருட்காட்சியினை 03-07-2020 முதல் 22-07-2020 வரை 20 தினங்கள் நடத்திடவும், 20-07-2020 அன்றய தினம் ஆடி அமாவாசை தினமாக நடத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3448**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 2

மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் ந.க.எண்.மதி4/1993/2019, நாள் 13-12-2019-ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்டம் 2019-2020-ன்கீழ் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) அமைக்க குழித்துறை நகராட்சி பகுதியில் இடம் ஒதுக்கீடு செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சி அலுவலக கட்டிடத்தின் பின்புறம் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒருபகுதியை ஒதுக்கீடு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3449**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 3

14-வது நிதிக்குழு மானியம் 2019-2020-ன்கீழ் ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 28-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மற்றும் 4 அரசடி வினாயகர் கோவில் சாலை முதல் (இடைத்தெரு) கழுவன்திட்டை ஆர்.சி.தெரு வரை மற்றும் நீதிமன்றம் செல்லும் சாலை பகுதிகளில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 1) திரு.டி. ஜஸ்டின்குமார், 14-58/7, புளிநின்றவிளை, கல்லுகெட்டி, குழித்துறை மதிப்பீட்டைவிட 0.23% குறைவு<br>2) திரு.டி. பிறேம்குமார், 12/85, தேவசகாய பவன், திருவனந்தபுரம் ரோடு, குழித்துறை. மதிப்பீட்டைவிட 0.08% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.40/2020/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3450**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 4

14-வது நிதிக்குழு மானியம் 2019-2020-ன்கீழ் ரூ.24.93 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 28-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 மற்றும் வார்டு எண்.16-ல் காட்டுவிளை, கொடுங்குளம் குறுக்கு சாலை (பீச்சப்பள்ளிவிளை) மற்றும் வடக்கு தெரு சாலை சீயோன் FGB சபை Church அருகில் சிமெண்டு காங்கிரீட் சாலை அமைத்தல். | 1) திரு.K.G. கிருஷ்ணதாஸ், ராமன் செம்பருத்திவிளை, பழவார், குழித்துறை அஞ்சல் மதிப்பீட்டைவிட 17.98% குறைவு<br>2) திரு.டி. ஜஸ்டின்குமார், 14-58/7, புளிநின்றவிளை, கல்லுகெட்டி, குழித்துறை மதிப்பீட்டைவிட 8.01% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு. K.G. கிருஷ்ணதாஸ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.41/2020/இ1.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3451</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பணியாளர்களின் வருகையை பதிவு செய்ய Bio metric முறைப்படி கைரேகை மற்றும் முகபாவத்தின் மூலமும் பணியாளர்களின் வருகை நேரம் மற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்க Bio metric attendance Unit ஒன்று பொருத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.19500/- வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3452</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 6</u>

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் கடன் பெறப்பட்டு நகராட்சி பேருந்து நிலையத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கடன் பெறப்பட்ட வகையில் 1-10-2019-க்குரிய காலாண்டு வரையில் அசல் வட்டி மற்றும் தண்ட வட்டியாக ரூ.56,73,262.05/- செலுத்திட நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் க.எண்.6474/2019/யுபி2, நாள் 16-10-2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014 முதல் கடன் தொகை நகராட்சி நிதி நிலைமை மிகவும் பின்தங்கியுள்ள காரணத்தால் செலுத்திட இயலவில்லை. தற்போது நகராட்சி நிதிநிலை திருப்திகரமாக உள்ளதால் கடன் தொகை மற்றும் வட்டி, தண்டவட்டி உட்பட அனைத்து தொகையினையும் உரிய துறைக்கு செலுத்திட மன்றம் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3453</u>**

**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நரியன்விளை மெயின்ரோட்டில் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஒடையில் சிறிது தூரம் மேல் மூடுசிலாப் அமைத்தல், நரியன்விளை வள்ளிக்கோடு குளம் அருகே சிமெண்டு காங்கிரீட் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M. ஷஜி | 5.00 | மதிப்பீட்டை விட 11.61% குறைவு |
| 2 | திரு.P. தேவதாஸ் | | மதிப்பீட்டை விட 25.96% குறைவு |
| 3 | திரு.A. ஆன்றணி (பாகோடு) | | மதிப்பீட்டை விட 12.45% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.P. தேவதாஸ் என்பவரால் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3454**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கு செல்லும் சாலையில் சிமெண்டு காங்கிரீட் தளம் மற்றும் வடிகால் ஒடை அமைக்கும் பணி மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.G.கிருஷ்ணதாஸ் | 9.90 | மதிப்பீட்டை விட 21.55% குறைவு |
| 2 | திரு.R. சுரேஷ்ராஜ் | | மதிப்பீட்டை விட 25.26% குறைவு |
| 3 | திரு.G. சுந்தர்ராஜ் | | மதிப்பீட்டை விட 11.00% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.R. சுரேஷ்ராஜ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3455**

**அனுமதிக்கலாம்.**

‘

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி செல்லும் சாலையில் சிமெண்டு காங்கிரீட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.G.கிருஷ்ணதாஸ் | 9.20 | மதிப்பீட்டை விட 0.40% அதிகம் |
| 2 | திரு.P. ஜெயச்சந்திரன் | | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.P. ஜெயச்சந்திரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3456**
**அனுமதிக்கலாம்.**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மற்றும் பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்திட 2019-2020-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S.J.C. Computers, Kuzhithurai | 0.85 | மதிப்பீட்டை விட 0.71% குறைவு |
| 2 | M/S.M.J.S. Computers, Kuzhithurai | | மதிப்பீட்டை விட 1.24% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.(1).J.C. Computers கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3457**

**அனுமதிக்கலாம்.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு சோடியம் ஹைப்போ குளோரைடு Solution (Bleaching Liquid) வினியோகம் செய்யும் பணிக்கு 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | 6.00 | மதிப்பீட்டை விட 5.88% அதிகம் |
| 2 | திரு.P. ஜெயப்பிரகாஷ் | | மதிப்பீட்டை விட 2.94% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.P. ஜெயப்பிரகாஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3458**

**அனுமதிக்கலாம்**.

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் வடக்கு தெரு, குழித்துறை முதல் கழுவன்திட்டை நெடுஞ்சாலைப் பகுதியில் சிமெண்டு காங்கிரீட் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | 1.00 | மதிப்பீட்டை விட 0.60% அதிகம் |
| 2 | திரு.P. ஜெயப்பிரகாஷ் | | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.P. ஜெயப்பிரகாஷ் என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3459</u>**

**அனுமதிக்கலாம்.**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12-ல் கூத்தமன்விளை பகுதியில் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | 0.95 | மதிப்பீட்டை விட 0.92% அதிகம் |
| 2 | திரு.P. ஜெயப்பிரகாஷ் | | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.P. ஜெயப்பிரகாஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3460**

**அனுமதிக்கலாம்**.

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள நீரேற்றிகள், சுலீஸ் வால்வு மற்றும் Non Return வால்வுகள் பழுதடைந்துள்ளதால் பழைய வால்வுகளை மாற்றுவதற்கும் புதிய வால்வுகள் வினியோகம் செய்வதற்கும் 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.C. சுரேஷ் | 3.30 | மதிப்பீட்டை விட 0.30% அதிகம் |
| 2 | திரு.G. சுரேஷ் | | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.G. சுரேஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3461**

**அனுமதிக்கலாம்.**

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சியில் 2019-2020-ம் ஆண்டில் தெருமின்விளக்குகள் பராமரிப்பு செய்வதற்கு மின்சாதன உதிரிப்பொருட்கள் வினியோகம்

செய்வதற்கு 30-01-2020-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | Mahaveer Electro Controls, Madurai | 9.90 | மதிப்பீட்டை விட 7.78% குறைவு |
| 2 | M/S. Velmurugan Agencies Nagercoil | | மதிப்பீட்டை விட 12.58% அதிகம் |
| 3 | M/S. Revathi Traders, Nagercoil | | மதிப்பீட்டை விட 8.80% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.(1) Mahaveer Electro Controls நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3462</u>**

**அனுமதிக்கலாம்.**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட துரும்பல்விளை குறுக்கு தெருவில் 110mm PVC கழிவுநீர் குழாய் மற்றும் சிமென்டு காங்கிரீட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.C. சுரேஷ் கண்ணக்கோடு | 0.90 | மதிப்பீட்டை விட 2.36% அதிகம் |
| 2 | திரு.S. பாபு, கீழ்குளத்தன்கரை | | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.S. பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3463</u>**

**அனுமதிக்கலாம்.**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரியும் திரு.எஸ். கிறிஸ்துராஜ் என்பவர் இந்நகராட்சி பகுதியில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.5750/- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகையினை திருப்பி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3464</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN.75P1813-ற்கு புதிதாக 6 டயர்கள் ரூ.50,000/- மதிப்பீட்டில் வினியோகம் செய்வதற்கு 10-01-2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | Jebin Tyres<br>Main Road,<br>Marthandam | 54200 |

| | | |
|---|---|---|
| 2 | A.K. Tyres,<br>Thengapattinam Road,<br>Marthandam | 53700 |
| 3 | Chockalingam Nadar,<br>Tyre Zone, Pammam,<br>Marthandam. | 53100 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 சொக்கலிங்கம் நாடார் டயர் சோன் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3465</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 19</u>

திரு. ஜஸ்டின்ராஜ் என்பவர் சிறையிலிருந்து விடுதலையாகி வந்து, கைதிகள் மறுவாழ்வு படி, தனக்கு தொழில் நடத்த நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒரு இடமோ அல்லது கடையோ வழங்க கேட்டு, மதுரை உயர் நீதிமன்றத்தில் WP(MD)No.2697/2020-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பில் நீதிமன்றம் ஆஜராகி வழக்காடியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்கிட வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் என்பவர் கேட்டுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

F.No.2443/2019/TPI.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3466</u>**

**அனுமதிக்கலாம்**.

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள குடிநீர் குழாய்கள், தெருவிளக்கு பராமரிப்பின்போது பழுதடைந்து மீண்டும்

பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள உதிரிப்பொருட்கள் மற்றும் இதர கழிவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட 20-02-2020 அன்று மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் உயர்ந்த டெண்டர் தொகை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. தர்மராஜ், நாகர்கோவில் | ஏலம் கோரவில்லை |
| 2 | திரு. அய்யப்பன், தம்மத்துக்கோணம் | 3,93,000 |
| 3 | திரு. சபரீஷ் தம்மத்துக்கோணம் | ஏலம் கோரவில்லை |
| 4 | திரு. நவீன், தம்மத்துக்கோணம் | ஏலம் கோரவில்லை |
| 5 | திரு.ஆர். சுயம்புலிங்கம், நாகர்கோவில் | ஏலம் கோரவில்லை |
| 6 | திரு.எ. பாஸ்கர், நாகர்கோவில் | 3,94,000 |
| 7 | திரு.எம். அஜித் நாகர்கோவில் | 3,95,500 |
| 8 | திரு.ப. ஜாண்பிரிட்டோ, குழித்துறை | ஏலம் கோரவில்லை |
| 9 | திரு. கதிரேசன், நாகர்கோவில் | 3,95,000 |
| 10 | திரு.ஆர். தேவராஜ், | ஏலம் கோரவில்லை |
| 11 | திரு. செல்வராஜ், நாகர்கோவில் | 3,91,500 |
| 12 | திரு. ராபர்ட் கென்னடி, கணபதிநகர் | 3,92,500 |

டெண்டரில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. செய்யது அலி<br>காட்டுவிளை, பம்மம் | 3,30,000 |
| 2 | சாதிக் அன்கோ<br>மார்த்தாண்டம் | 4,87,786 |
| 3 | திரு.பா. ஜாண்பிரிட்டோ<br>குழித்துறை | 4,05,000 |
| 4 | திரு. முருகன்,<br>நாகர்கோவில் | 4,21,929 |

வரப்பெற்ற ஏலத்தில் திரு.எம். அஜித் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.3,95,500/-
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.சாதிக் அன்கோ என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,.4,87,786/-ஐ அங்கீகரிக்க மன்றத்தின் அனுமதிக்கு.
மேலும் 9-12-2019 அன்று மேற்படி பழைய பொருட்கள் டெண்டரில் கலந்து கொண்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,80,000/-ற்கு டெண்டர் கொடுத்த Alex, கொல்லம் என்பவர் மேற்படி தொகை செலுத்தப்படாததால் அன்னாரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.5,000/-ஐ பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3467**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 21

குழித்துறை நகராட்சி உள்ளாட்சி தேர்தல் இடஒதுக்கீடு சம்மந்தமாக திரு. செல்வராஜ் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில்

தொடரப்பட்ட வழக்கு எண்.21496/2017-க்கு நகராட்சி சார்பில் நீதி மன்றம் ஆஜராகி வழக்காடிய வகையில் வழக்கறிஞர் கட்டணத்தொகை ரூ.10,000/-ஐ வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2538/2017/அ1

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3468</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 22</u>

குழித்துறை நகராட்சிக்கு எதிராக சொத்துவரி சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரையில் திரு. அப்துல் கமால் நாசர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.2697/2020-க்கு நகராட்சி சார்பில் நீதி மன்றம் ஆஜராகி வாதாடிய வகையில் ரூ.10,000/-யை வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.501/2020/அ1

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3469</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 23</u>

வெட்டுவெந்நி சாஸ்தான்கோவில் பக்கம், சப்பாத் சாலையில் நின்ற மாமரக்கிளை காற்றில் ஒடிந்து சாலையின் குறுக்கே விழுந்து உள்ளது. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி இயந்திரக்கட்டர் பயன்படுத்தி அவசர அவசியமாக அப்புறப்படுத்த வேண்டிய நிலையில், திரு. ராஜன் என்பவர் மூலம் இயந்திரகட்டர் பயன்படுத்தி மரக்கிளையை அறுத்து அப்புறப்படுத்தப்பட்ட வகையில் செலவு தொகை ரூ.3,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3470</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 24</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வார்டுகளில் உள்ள பகுதிகளுக்கு தாமிரபரணி ஆற்றின் கரையில் சப்பாத்து பகுதியில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியில் குடிநீர் வடிகட்டி படுக்கை (Filter bed) இல்லாத காரணத்தால் ஆற்றிலிருந்து நேரடியாக தண்ணீர் எடுக்கப்பட்டு Liquid chlorine மூலம் Chlorination செய்யப்பட்டு வருகின்றது. தற்போது Chlorination செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் dosing pump-ம் பழுதடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ளது. பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு இரண்டு pump-ம் புதிதாக வாங்கி பொருத்தவும் அதற்கான உபகரணங்களை புதிதாக மாற்றியமைக்கவும் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்ப பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3471</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

## குழித்துறை நகர்மன்றத்தின் 27-02-2020 வியாழக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான கடைகளுக்கு 27-02-2020-ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|
| I. 1 | திருமதி.G. சுதா, க/பெ.கே. சசி | வெட்டுவெந்நி பி.பி.முனிசாமி வணிகவளாக கடை G3 | 5000 |
| II. 1 | திரு.R. ஜெயகுமார், | பேருந்து நிலைய - A.பிரிவு கடை எண்.13 | 7500 |
| 2 | திருமதி.C. சரஸ்வதி | பேருந்து நிலைய A.பிரிவு கடை எண்.13 | 8000 |
| III. 1 | கிளைமண்ட் பிரேம்குமார் | பேருந்து நிலைய B.பிரிவு கடை எண். 3 | 10000 |
| 2 | திரு. ஸ்டான்லி ஆன்றணி இன்னாசி முத்து | பேருந்து நிலைய B.பிரிவு கடை எண். 3 | 10500 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-க்கு ஒருநபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி கடைக்கு தொடர்ந்து 40 முறை ஒப்பந்தப்புள்ளி/ ஏலம் கோரியதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட தொகையானது கடந்த வருடங்களில் மாத தொகை ரூ.3560/-ஐ விட அதிகமாக உள்ளதால் உரிமம் வழங்கலாம்.

வரிசை எண்.2-க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இரு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதில் திருமதி.C. சரஸ்வதி என்பவர் கொடுத்துள்ள குத்தகை தொகையானது கடந்த வருடங்களில் கொடுத்துள்ள குத்தகை தொகையினை விட குறைவாக உள்ளது. மேற்படி இடங்களில் உள்ள A.பிரிவு கடைகள் வரிசையாக 1 முதல் 10 கடைகள் காலியாக உள்ளது. தொடர்ந்து பலமுறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியபோதும் ஒரு நபர் கூட ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. நகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் தொடர்ந்து இழப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது கோரப்பட்ட மாத வாடகை தொகையினை ஒப்பு கொள்ளலாம்.

வரிசை எண்.3.க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இரு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதில் திரு. ஸ்டான்லி ஆன்றணி இன்னாசி முத்து என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட அதிகமாகவும் அரசாங்க மதிப்பு ரூ.10500/-ஐ விட அதிகமாக உள்ளதால் உரிமம் வழங்கிட மன்றம் அனுமதிக்காக.

ந.க.எண்.2036/2018/அ2

<u>**நகர்மன்றத் தீர்மான எண் .3472**</u>

**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகர்மன்றத்தின் 25-02-2020-ம் தேதிய 3448-ம் எண் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

95-வது வாவுபலி பொருட்காட்சி 03-07-2020 முதல் 22-07-2020 முடியவுள்ள காலத்திற்கு பொது ஏல உரிமை இனங்கள் மற்றும் ஏல நிபந்தனைகள்

| வ. எண் | குத்தகை உரிமம் | வைப்புத் தொகை ரூபாய் வங்கி வரைவோலை |
|---|---|---|
| 1 | வாவுபலி பொருட்காட்சி திடலில் நுழைவு கட்டணம் வசூல் செய்தல் | |
| 2 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும உரிமம் | |
| 3 | பொருட்காட்சி திடலில் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் | |

| | | |
|---|---|---|
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் உரிமம் | 50.00 இலட்சம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி கூல்டிறிங்ஸ் விற்பனை செய்யும் உரிமம் | |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி உணவு விடுதி நடத்தும் உரிமம் | |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் | |
| 8 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் | |
| 9 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி பானிபூரி விற்பனை செய்யும் உரிமம் | |
| 10 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன்பக்கம் உள்ள 11 கடைகள் கட்டி விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7'x5' | |
| 11 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் 9 கடைகள் கட்டி விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7'x6' | |
| 12 | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள 20 கடைகள் கட்டி விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 8'x6' | |
| 13 | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகள் கட்டி விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 10'x9' | |

<u>மேற்கண்ட அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்</u>

குழித்துறை நகராட்சியால்ஆண்டுதோறும் ஆடி அமாவசையை முன்னிட்டு நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருடகாட்சியை நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசு ஆணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி இப்பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்துபவதற்க நிரந்தர அனுமதி குழித்துறை நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்டதின்படி 95-வது வாவுபலி பொருட்காட்சி 03-07-2020 முதல் 22-07-2020 முடிய நடத்துவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகள் பின்வருமாறு.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.1000/- செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் Passport அளவிலான புகைப்படத்துடன் ஆதார் அடையா அட்டை Pancard மற்றும் கைபேசி, தொலைபேசி எண் கொடுக்க வேண்டும்.

3) விண்ணப்பத்தில் புகைப்படம் ஒட்டப்பட்ட நபர் மட்டும் தான் ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரில் நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையிருப்பின் வரியினை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். வரி நிலுவை இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. நகராட்சி தடையின்மை சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும்.

4) ஏலத்தை முடிவு செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழங்கப்படும். உத்தரவுப் பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் குத்தகை முழு தொகை மற்றும் வரிகள் உட்பட நகராட்சி கஜனாவில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகை பறிமுதல் செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும்.

5) ஏலத்தை/ ஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ அல்லது வேறு ஒருதேதிக்கு தள்ளி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

6) ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உரிமம் பெற்றவர் உத்தரவில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் தனது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். தவறினால் உரிமம் வழங்கப்பட்ட இடத்தில் அன்னாரை பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

7) நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமை பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

8) இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளப்பெருக்கம், தீ மற்றும் அரசால் நிறுத்தப்படும் தினம் போன்றவைகளால் ஏற்படும் இழப்புகளுக்கும் உரிமம் பெற்றவரே பொறுப்பாவர், இதில் நகராட்சி எவ்வித பொறுப்பாகாது.

9) நகராட்சி அனுமதியுடன் பொருட்காட்சி நடத்த அனுமதி பெற்றவர் தங்கள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தையும் மின்சார வாரியத்திற்கும் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தை தீயணைப்பு துறைக்கும் செலுத்திட வேண்டும்.

10) ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீங்குவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனங்களையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட மாட்டாது. துறைகளால் தடை செய்யக்கூடிய நிகழ்ச்சிகள் பொருட்காட்சி அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் பக்கக்காட்சி அமைக்கப்பட வேண்டும். மேலும் நகராட்சியால் வழங்கப்படும் வரைபடத்தின் அடிப்படையில் பக்கக்காட்சி மற்றும் கடைகள் அமைக்கப்பட வேண்டும்.

11) நுழைவு கட்டணம் பெரியவர் ரூ.10/- மற்றும் சிறியவர்களுக்கு ரூ.5/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும். அதற்கான நுழைவு சீட்டு தங்கள் செலவில் அச்சிட்டு குழித்துறை நகராட்சியின் முத்திரையிட்டு வழங்கப்பட வேண்டும்.

12) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் தான் கட்டாயமாக பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.

13) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருள்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழங்க வேண்டும்.

14) பக்கக்காட்சி எடுக்கும் குத்தகைதாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் வரைபடத்தின்படி கபடி நடத்த 50'x50' இடம் விட்டுதான் அனைத்து பக்கக்காட்சி இனங்களும் அமைக்கப்பட வேண்டும்.

15) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக்கூடாது. கபடிப்போட்டிக்கான இடத்தில் பக்கக்காட்சி அமைக்ககூடாது.

16) குத்தகை இனங்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் பொருந்தும்.

17) ஏலத்திற்கான கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்களுக்கும் பொருந்தும்.

18) பறவைகள் அல்லது மிருகங்கள் மற்றும் சூதாட்டம், ரிக்கார்டு டான்ஸ் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் நடத்த அனுமதிக்க கூடாது.

19) கட்சி சின்னங்களோ கொடிகளோ மதசம்மந்தமானவை குறித்த பிரச்சாரங்களோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.

20) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகுபோக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.

21) 2017-2018, 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டிற்குரிய குத்தகை இனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

22) பக்கக்காட்சி அமைப்பவர் தீதடுப்பு துறைச் சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நகராட்சி பொறுப்பேற்காது.

23) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனங்களை தவிர வேறு வியாபாரம் செய்யக்கூடாது

24) பொருட்காட்சி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.

25) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.

26) பொருட்காட்சி துவக்க விழா மற்றும் நிறைவு விழா, பொருட்காட்சி திடலில் கபடி போட்டி நடத்துதல், பரிசு பொருட்கள் வழங்கல் புகைப்படம் எடுத்தல் போன்றவை நகராட்சியை சார்ந்தது.

27) பொருட்காட்சி திடலில் தேவையான இடங்களில் சென்டிறிங் அடித்தல், மணல் நிரப்புதல், ஒலி, ஒளி அமைத்தல், கேமரா பொருத்துதல் மற்றும் நுழைவு வாயில் அலங்காரம், 4 இடங்களில் ஆர்ச் மற்றும் குழித்துறை சந்திப்பு தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் குழல்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளை குத்தகைதாரரே செய்ய வேண்டும்.

28) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடை 11-ம், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20-ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் 9-ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ்பகுதியில் உள்ள நிரந்தரமான 12 அரசு ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான அரசு ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும் அதை ஒட்டி பாப்கான் பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கூல்டிரிங்ஸ் கடையும் எம்.எல்.ஏ. அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் இலாகாக்களின் அரங்கமும் அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும் அதனை ஒட்டி தீயணைப்பு துறை வெளிப்புற அலுவலகமும், அதனை ஒட்டி அப்பளபஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக்காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் அந்தந்த வருடங்களில் மாற்றி அமைக்கப்படும்.

29) குத்தகை இனம் வரிசை எண்.3 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டும். தேவையற்ற, அருவருக்கதக்க விளம்பரங்கள் செய்திட அனுமதி இல்லை. வாவுபலி பொருட்காட்சி திடலுக்கு வெளியில் சாலையோரம் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு சதுர அடிக்கு கட்டணம் ரூ.5/- முதல் ரூ.10/- வரை நாள் ஒன்றுக்கு கடையின் தரத்திற்கு ஏற்ப குத்தகைதாரர் வசூல் செய்யப்பட வேண்டும்.

30) மேற்கண்ட குத்தகை இனங்களில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையினை 100% முழுமையாக ரொக்கமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி தெரிவிக்கும் பட்சத்தில் தங்களின் மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

31) குழித்துறை நகராட்சியால் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட வாவுபலி பொருட்காட்சியில் கடைகள் மற்றும் ஏனைய இனங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு குத்தகை தொகை செலுத்தாமலும் கடைகளை திறக்காமலும் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய குத்தகைதாரர்கள் மற்றும் நகராட்சியினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையாக உள்ளவர்கள் இவ்வாவுபலி பொருட்காட்சி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

32) 95-வது வாவுபலி பொருட்காட்சியில் பக்கக்காட்சி எடுக்கும் நபர் நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு பக்ககாட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்து இனங்களையும் அவர்கள் விரும்பும் தேதியில் ஒருகுடும்பத்திற்கு (7 நபர்கள்) ஒருமுறை கட்டாயம் பார்வையிடவும், பயன்படுத்திடவும் அனுமதிக்க வேண்டும். பொருட்காட்சி துவங்கும் நாளன்றே பாஸ் வழங்கப்பட வேண்டும்.

33) குத்தகை இனங்களுக்கு மத்திய, மாநில அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் ஆணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஒப்பந்தகாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு பொருந்தும்.

34) 95-வது வாவுபலி பொருட்காட்சி ஏலம். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு குத்தகை எடுக்கும் இனங்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வழங்க வேண்டி இருந்தாலும் மற்றும் நிலுவை தொகை வழங்க வேண்டி இருந்தாலும உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட்ட உடன் அவர்களது தொகை திருப்பி வழங்கப்படும்.

35) வாவுபலி பொருட்காட்சி தொடர்பாக பொருட்காட்சி திடலில் சேகரமாகும் குப்பைகளை குத்தகைதாரர் சொந்த செலவில் அப்புறப்படுத்தப்பட வேண்டும். மேலும் கைவினை பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் கண்காணிக்க நபர் நியமிக்கவும், பொருட்காட்சி நடைபெறும்

நாள் முதல் முடிவுபெறும் நாள் வரையுள்ள மின்கட்டணம் குத்தகைதாரரை சார்ந்தாகும்.

**<u>நகர்மன்றத் தீர்மான எண் .3473</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.